உ
சிவமயம்







# சைவ வாழ்வியலும் இடர்களை பதிகமும்

வெளியீடு:

## V.M.K நகைமாடம்

சாவகச்சேரி

21.06.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்







# சைவ வாழ்வியலும் இடர்களை பதிகங்களும்

சாவகச்சேரி நகர்

அருள்மிகு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர

வாரிவனநாதர் சிவன் ஆலய

சித்திரத்தேர்ப்பவனி அன்று

வெளியிடப்பெற்றது.

21-06-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

பெரு நீர்ப்பரப்பினால் சூழ்ந்த இலங்காதேவியின் திலகமாய் ஒளிவீசும் சாவகச்சேரியில் சைவத்தமிழர்கள் உயர்வாழ்வினில் நல்ல ஆரோக்கியத்தினை எக்காலமும் நல்கி அருள்சுரந்துவரும் அமிர்தபாஷினி அம்பிகை உடனுறை சந்திரசேகர வாரிவனநாதர் சுவாமியின் திருத்தேர் (புதியதேர்) பவனிவரும் புனிதநாள் இன்று. அன்று என்றோ தேர் ஓடியது இந்த திருவீதியில் என்ற எண்ணத்தை விரட்டி, இன்று புதிய தேர் நன்று ஓடுகின்றது என்றும், மனதினில் சிலவருட கால பிரம்மோற்சவம் இல்லாத குறையை இத்தலத்தில் நீக்கி, பெருமான் பேரருள் சுரக்கும் அற்புததிருநாள் இன்று.

தேர் என்றால், நல்லதை தேர்ந்தெடுத்தல் என்று பெரியோர் கூறுவர். அதாவது, இறைவன் தீயவற்றை அழித்து நல்லவற்றை தேர் (T) செய்யும் திருநாளே இது எனலாம். அதனால்தான் இத்திருவிழா அழித்தல் எனப்பட்டது. தேரும் அக்கினி வடிவமாக அமைக்கப்படுவது எண்ணப்படுவது இதனால்தான். நெருப்புக்கு தீயதை சுட்டு நன்றானதாக பக்குவப்படுத்தும் ஆற்றல் நிறையவுண்டு என்பதனை நாம் நன்கு, அனுபவத்தால் உணர்ந்துள்ளோம். இந்த அக்கினி வடிவமான தேர் தீயதிலிருந்து நல்லதாக தோன்றுகின்றது அல்லது தேர்வு செய்கின்றது என்பது சுருக்கமான தத்துவம் ஆகும்.

இன்று நல்லதை தேர்ந்தெடுக்கின்றது இந்த தேர் உற்சவம் என்பதற்கு, சித்தாந்த பண்டிதர் திரு. கு. சுமுகலிங்கம் (J.P.) அவர்கள் தொகுத்து ஆக்கி வெளியிடும் 'சமய வாழ்வியலும் இடர்நீக்கும் பதிகங்களும்' எனும் நூலே நல்லசான்று இக்கருத்துக்கு ஆகும். இந்த நல்ல முயற்சிக்கு உறுதுணையாக நிதியுதவிய மகோற்சவத்தின் ஐந்தாம்தின உபயகாரராகிய புலேந்திரன் குடும்பத்தினர் வழங்கி உதவியமையும் இறைவன் இச்செயலை இன்று நடாத்தவேண்டும் என முன்பே தேர்வுசெய்த காரணமாக இருக்குமோ என எண்ணத் தூண்டுகின்றது. நன்று என்றால் என்றும் செய்யலாம். ஆனால் இன்று செய்வதால் பெரும்சிறப்பே உண்டு. ஏனெனில், இறைவனாலேயே தேர் (வு) செய்யப்பட்டது என்பதால். ஆதலால் அவனருளால் உங்கள் கரத்தில்கிடைத்த இந்தப்பிரசாதநூலால் நீங்களும், வெளியிட்டோரும், துணைநின்றோரும் பரிபூரணமான சிவமங்கள வாழ்வு நிறைவுபெற பெருமானை மனஅன்போடு வேண்டுகின்றேன்.

நன்றி

மூளாய்.　　பிரம்மஸ்ரீ தி. உமாசுதக்குருக்கள் B.A (Hons.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்று கூறி மானிடத்தை மேம்படுத்தி, அம் மானிடவாழ்வை வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, வலியுறுத்துவது சைவநெறி. இதனை அடிப்படையாகக்கொண்டு நல்லதொரு தலைமுறை நம்மிடையே உருவாகவேண்டுமென்ற பெருநோக்கோடு, சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள் முயன்று உருவாக்கிய "சைவ வாழ்வியலும் இடர்களை பதிகங்களும்" என்னும் நூல் அமைகின்றது. இவர் சமயபாடத்தை நன்கு கற்பித்த அனுபவமும், சைவத்தொண்டு புரிந்த நல்லனுபவமும் வாய்க்கப்பெற்றமையால் இந்நூல் மிகவும் பயனுள்ள வகையிலுள்ளது. பள்ளி மாணவர் முதல் பெரியோர் வரை அனைவருக்குமேற்ற வகையில் இந்நூலமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சமயக் கருத்துக்களை மட்டுமன்றி ஆலய வழிபாடு தொடர்பான விளக்கங்களும் இந்நூலில் நன்கமைந்துள்ளது. ஆரம்ப முயற்சியெனினும், அர்த்தமும் ஆழமுமிக்க முயற்சி. எமது வலயத்தில் இவரது சேவை நன்குதொடர வாழ்த்துகிறேன். இந்நூலை சைவ உலகுக்கு வழங்குவதற்கு ஒத்தாசை புரிந்த தனவந்தர்களது (V.M.K. உரிமையாளர்) நன்மனம் பாராட்டத்தக்கது. அவர்கள் தம் பணிதொடர வாழ்த்துகிறேன். இவர்தம் மேலான பணிதொடர இறைபதம் இறைஞ்சி ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**திருமதி அ. வேதநாயகம்,**
**தென்மராட்சி கல்வி வலயப்பணிப்பாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"சைவ வாழ்வியலும் இடர்களை பதிகங்களும்" என்னும் நூல் சைவ மாணவர்கள் தமது பாரம்பரியம், பண்பாடுகள் தொடர்பாக அறிந்துகொள்ள பயன்மிக்க ஒருநூலாகக் காலத்தின் தேவைகருதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் மூலம் ஆசிரியர் இளம் சமூகத்தினரை நல்வழிப்படுத்தி சீரியபாதையில் வழிநடாத்த முயன்றுள்ளார்.

எமது பாடசாலை மாணவர்களை குறுகிய காலத்தில் சிறந்த சைவப் பாரம்பரியம் மிக்கவர்களாக மாற்றியதுடன் ஒழுக்கசீலர்களாக ஆக்கி வழிநடாத்துவதில் வெற்றியும் கண்டுள்ளார்.

இவரின் சைவப்பணி, சமூகப்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

**திரு. இ. ரவீந்திரன்,**
அதிபர்,
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

என்றும் என்னை வழிநடத்திவரும் அருள்மிகு வெளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகன் திருப்பாதக்கமலங்களில் என் சிரம் தாழ்த்தி மண்டியிட்டு வணங்கி எங்கள் குலம்காத்துவரும் குல தெய்வங்களாம் துத்தியில் ஐயனார், முறைப்பர், வீரபத்திரர், சிவசுப்பிரமணியரையும் என் நெஞ்சிலிருத்தி முன்னுரையும் முன் வைக்கின்றேன். பெற்றெடுத்து கண்கண்ட தெய்வங்களாக, என்னை இன்றுவரை வழிநடத்திக்கொண்டிருக்கும் ஐயா, அம்மா இருவரின் பாதங்களையும் பணிந்து, இன்றுவரை கல்வியில் ஆசாரசீலர் களாகவும் இருந்துவரும் அனைவரின் பாதங்கள் பணிந்து வணங்கு கின்றேன். எல்லாம்வல்ல அமிர்தபாஷனி சமேத சந்திரசேகர வாரிவன நாத சிவனை வழிபாடு செய்யத்தொடங்கி 35 வருடம்வரும் என எண்ணுகின்றேன்.

"என்னையும் ஓர் பொருளாக்கினாய் சிவிகை ஏற்றுவித்த" என்ற மணிவாசகரின் திருவாசக பாடலடிகள் கருத்துப்போன்று எனது அறிவுக்கு எட்டியவரை சிலவற்றை இன்றைய சமூகத்துக்கு தெரியப்படுத்தவேண்டும் என்ற எண்ணவலையின் காரணமாக இம் முயற்சியில் இறங்கினேன். இச்சிறு நூலிற்கு பேருதவியான பொருளு தவிபுரிந்த V.M.K நகையக உரிமையாளர் பெருமதிப்புக்குரிய அண்ணா V.M.K புலேந்திரன் அவர்கள், அவர்தம் பாரியார், குழந்தைகள், குடும்பத்தினர், தொழில்வல்லுநர்கள் அனைவருக்கும் எம்பெருமான் அருள்பாலிக்கவேண்டுகின்றேன்.

இவர் அளித்த உதவியால் இன்று உங்கள் அனைவருக்கும் வாழ்வில் பயன்படும் மக்கள் வளர்ச்சி, ஆன்மிக சிந்தனை, ஒழுக்கம், மனித விழுமியங்கள் மதித்துவாழும் சமூகம் உருவாகவும் இக் காலத்து இடர்தீர்த்து வாழ நாளாந்தம் பாராயணம் செய்யவும் உகந்ததாக அமையும் என்று எண்ணுகிறேன். கல்வியும் வாழ்க்கையும் ஒன்றே அன்றி இரண்டல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனிடம் தான்கற்றுத்தேறும் துறைக்கமைய சிந்தனை யோட்டம் அமையவேண்டும்.

1) ஆக்கபூவமான சிந்தனை
2) படைப்பாற்றல்
3) ஆளிடைத் தொடர்புகள்
4) ஒத்துழைப்பு
5) சமத்துவத்தை பேணுதல்
6) சுய முகாமைத்துவம்
7) வளங்களின் முகாமைத்துவம்

இவைபற்றி சிந்திப்பது "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கமைய இளமையில் பிள்ளை பெறவேண்டிய அறிவை பெற்றார் வழிகாட்ட, இந்நூலில் கூறியவற்றை கடைப்பிடிக்க வேண்டுமென வேண்டுகின்றேன். அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் பயன்படுத்துவதும் மிகச்சிறப்பானது. ஏதாவது, சொற்குற்றம், பொருட் குற்றம் இருப்பின் என்னிடம் தெரியப்படுத்துவீர்களாயின் திருந்தி என் வளர்ச்சிக்குதவிய பெருமைக்கு உரியவர்களாவீர்கள்.

எனது வாழ்க்கை வழிகாட்டிகளான ஆலய முகாமையாளர் திரு. ம. கந்தையா, அர்ச்சகர், நித்தியபூசகர் தெட்சணாமூர்த்திசர்மா, அதிபர் S.T. இளங்குமரன், Lion S.K நவரட்ணம், திருக்கணித முகாமையாளர் திரு. கா. சிவஞானசுந்தரம் குடும்பத்தினர் ஆகியோருக்கும், எனது வழியில் தடையில்லாது வண்டிலை இழுக்க அச்சாணியாக விளங்கும் என் இல்லத்தரசிக்கும் எல்லாவற்றும் மேலாக ஆசியுரைகள், வாழ்த்துரை வழங்கிய குருக்கள்ஐயா, வலயக்கல்விப்பணிப்பாளர், அதிபர் ஆகிய அனைவருக்கும் சிவனருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

வணக்கம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

தொகுப்பாசிரியர்:- **குமாரசாமி சுமுகலிங்கம்** J.P
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்,
இந்துதர்மாசிரியர், பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்,
**சாவகச்சேரி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**என் கண்கண்ட தெய்வங்களின் பெயரால்**

**எம்பெருமானின் பாதக்கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.**



ஆன்மீக வாழ்வு வாழ்ந்துகாட்டி "இறைபணி உயர் பணி" என்ற தத்துவத்தை உணர்த்தி வளர்த்த தங்களின் பாதக் கமலங்களுக்கு சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம். இந்நூல் வெளிவரும் இந்தநாள் ஆன்மீக இலட்சியங்கள் வளர எங்கள் பங்களிப்பை வழங்க சந்தர்ப்பமளித்து அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சுவாமியின் திருவருளை எண்ணி, எண்ணி மனம்உருகி பிரார்த்தித்து மக்கள் அனைவரும் நல்வழி வாழவேண்டும் என்றும் எண்ணம் முழுமைபெற வேண்டும் என வினயத்துடன் கேட்டு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சுவாமியின் பாதக் கமலங்களுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றேன்.

**திரு. க. புலேந்திரன்,**
*V. M. K.* நகையகம்,
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாறு

## அமிர்தபாஷிணி சமேத சந்திரசேகர வாரிவன நாதர் சிவாலயம்

வாரிவனம் அல்லது வாரிவனேஸ்வரம் என்னும் பதி சாவகச்சேரி நகரிலே அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவன நாத சிவன் என்னும் நாமத்துடன் கோயில் கொண்டெழுந்தருளி சிவன் அருள்பாலித்துவருகிறார். இத்தலத்தை விருப்பாக்கன் என்றும் சோழமன்னன் வழிபட்டதாகவும் தெட்சணகைலாய மான்மியம் கூறுகின்றது.

கோயிலைச்சார்ந்த திருக்குளத்தின் அருகில் சிவலிங்கத்தையும் அம்பாளையும் அக்காலத்து அன்பர்கள் புதைத்து வைத்துள்ளனர். டச்சுக்காரர் ஆட்சியில் இவ்வாறு செய்யநேர்ந்தது.

பின்னர், ஆங்கிலேயர் ஆட்சியில் தாமே வெளிப்பட்டதாகவும் வரலாறுகள் உள்ளன. எங்கும் நீர்வாழித் தடாகம் காட்சியளித்த படியால் வாரிவனம் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். அருள் வாரியான அப்பன் ஆன்மகோயன் உய்யத் தம்மருள் வாரி வழங்கிய இடம் என்றும் கூறலாம். இங்குள்ள சிவலிங்கம் காசியில் கிடைத்த பாணலிங்க விசேடமுடைத்தது. வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் அத்திவாரமிடப்பட்ட சுபதினத்திலே இவ்வாலயமும் அத்திவாரம் இடப்பட்டதாக அறியக்கிடக்கிறது.

பாடல்பெற்ற புண்ணிய தலமான திருக்கேதீஸ்வரம் இரு இலிங்கங்கள்வைத்து பூசிக்கப்படுவதுபோல வாரிவனேஸ்வரர் கோயிலும் அமைந்துள்ளது. இக்கோயில் புதுக்கி பரிவார மூர்த்திகளுடன் ஐந்துகாலப்பூசை, மகோறசவம், லட்சார்ச்சனை, புராண படனங்கள், குருபூசைகள், மாதாந்த பிரதோச உற்சவங்கள் எல்லாம் நடைபெற்றதுடன் மகோற்சவ காலம் ஐந்து தேர்கள் இருந்ததாகவும் அவை கைவிடப்பட்டு மூன்று தேர்கள் இருந்ததாகவும் பின்னர் ஒரு கட்டுத்தேர் இருந்ததாகவும் 1999-ம் ஆண்டு மகோற்சவம் இறுதியாக நடந்ததாகவும் அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் **மூன்று சிறப்புக்களை** காணமுடிகிறது. இறைவன் ஆன்மகோடிகளை ஆட்கொள்ள அமைந்த ஆலயங்கள் மூன்று சிறப்புக்களை உடையன. அதனை அறிந்த தலயாத்திரை செய்வோர் ஒரு மண்டலம், அரைமண்டலம், கால்மண்டலம் அல்லது சிலநாட்கள் தங்கியிருந்து தம்குறைகளை நீக்குவர். மூர்த்தி, தலம். தீர்த்தம் என்பனவே இக்கோயிலை மெருகூட்டுகின்றன. சிதம்பரத்திலே அமைந்ததை பின்வரும் பாடல் விளக்கும்

**"தீர்த்தம் என்பது சிவகெங்கையே**
**மூர்த்தியம்பலக் கூத்தனதுருவே**
**ஏத்தருந்தல மெழிற்புலியூரே"** என்பதாம்.

இத்தலத்தில் வசிப்பதும் தீர்த்தமாடுவதும் மூர்த்தி தரிசனம்செய்வதும் பெரியபாக்கியமாகும். நமது வாரிவனத்தி லும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களையும் அறிந்து பயன் பெறும் பாக்கியம் சைவமக்களுக்குண்டு.

இங்குள்ள தீர்த்தம் வினை தீர்ப்பதாய் காணப்படுவதால் இத்தீர்த்தத்தினை பாதுகாத்து திருப்பணிசெய்து உய்வடைய வேண்டிய பொறுப்பு சைவநன்மக்களுக்கு உண்டு.

அறிந்தவரையில் கோயில் பரிபாலனம் பரம்பரை தர்மகர்த்தா வழியாக திருப்பணிகள் நடைபெற்றுவருகிறது.

புலோகநாதமுதலியார் என்பவர் சந்நிதிவளவு என்ற காணியில் 1781-ம் ஆண்டு கோயிலை ஸ்தாபித்து பிள்ளையார், சிவன், அம்மன், சுப்பிரமணியம், வைரவர் என்னும் பரிவார மூர்த்திகளுடன் ஸ்தாபித்தார்.

அவர் பரம்பரையில்

| | |
|---|---|
| சோமநாதமுதலியார் - | பிள்ளையார், அம்பாள், சுப்பிரமணியர், வைரவர் |
| சபாபதி முதலியார் - | திருக்குளம், தேர், ஓடும்வீதி (பதுமைத்தீர்த்தம்) |
| தம்பையா - | அன்னதான மடம் - ஐயர் மடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பரராசசேகரம்பிள்ளை | - | சுற்றுபிரகாரம், கொட்டகை |
| தம்பையா (உடையர்) | - | வாகனங்கள் |
| சிவராசசிங்கம்<br>சந்திரசேகரம் | - | குளம், கிணறு, இலட்சார்ச்சனை<br>சிறப்புமலர் வெளியீடு |
| பரமேஸ்வரி சந்திரசேகரம்<br>ச. லோகநாதன்<br>கி. சிவசுப்பிரமணியம் | } | புனருத்தாரணம் திருப்பணி வேலைகள்<br>புதிய கொடித்தம்பம், தேர், வாகன வேலைகள்<br>நிர்வாகமும் தர்மகர்த்தாவும்<br>மகோற்சவம்<br>ஆலோசனை, அனுசரணை |

1970-ம் ஆண்டு தொடக்கம் மயில்வாகனம் கந்தையா அனுசரணையுடன் 1995-ம் ஆண்டு கும்பாபிஷேகமும் இறுதியாக 1999-ம் ஆண்டு மகோற்சவமும் இடம்பெற்றது. 2000-ம் ஆண்டு இடப்பெயர்வின்பின் 2002-ம் ஆண்டு அழிவு பல இடம்பெற்று ஆலயம் சீரழிந்தநிலையில் இருந்தது. நித்திய பூசையே பல பிரச்சினைகட்கு மத்தியில் நடைபெற்றுவரும்வேளை 2003-ம் ஆண்டு வைசாசி/சித்திரை மாதம் இப்போதைய கோயில்பூசகர் ஐயா செல்லையா குருக்கள், தெட்சணமூர்த்தி சர்மா அவர்கள் காட்டியவழியில் தென்மராட்சி மக்கள் இப்பகுதியிலிருக்கும் சிவாலய வளர்ச்சி வழிபாடுகளில் தம்மை அர்ப்பணித்து 2005-ம், 2006-ம் ஆண்டு அலங்கார உற்சவம் நடைபெற்றது. சிவராத்திரியில் மாதாந்த உற்சவங்கள், பிரதோசம், திருவாசகமுற்றோதல், கந்தசஷ்டிகவசம், திருவெம்பாவை, நடேசர் அபிசேகம், குருபூசைகள் 3 காலப் பூசைகள் என்பன நடைபெற்று திருப்பணி வேலைகளும் 3½ ஆண்டு காலத்தில் சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல வாரிவனநாத சிவன் அருள்பாலித்து இன்று மகோற்சவம் ஆரம்பமாகி தேர் ஓடும் தினத்திலே புதிய தேர் ஓடுவது தென்மராட்சி மக்களையும் ஆலய முகாமையாளர், நித்திய பூசகர், தர்மகர்த்தா, நிர்வாகி சிவசுப்பிரமணியம் ஆகியோரையும் சிவன் வழிநடத்துகின்றான் என்பதனை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருமைக்குரிய சைவ அன்பர்களுக்கு!**

பிள்ளைகள் குருவின் சமய போதனைகளைத் தினமும் வீட்டில் கடைப்பிடிக்க உங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. நாங்கள் போதிக்கும் நல்ல போதனைகளை பிள்ளைகள் வீட்டில் கடைப்பிடித்துப் பழக உங்களுடைய தூண்டுதல் மிகவும் முக்கியமானது.

**பெருமைமிக்க தாய் தந்தையர் கவனத்திற்கு:**

பிள்ளைகள் நல்ல பழக்கம் பெறுவதற்கு

1. பெற்றோரை பாதம்தொட்டு வணங்கும்படி பிள்ளைகளுக்குத் பெற்றோரே சொல்லிவர வேண்டும்.
2. 'வகுப்பில் குருவணக்கம் செய்தீர்களா?' என்று வகுப்பு முடிந்து வீடு வரும்போது பிள்ளைகளைக் கேட்கவேண்டும்.
3. வகுப்பில் படித்த விடயங்களைச் சொல்லும்படி பிள்ளைகளைக் கேட்கவேண்டும்.
4. பிள்ளைகள் தமது அன்றாடக் கடமைகளைச் செய்கிறார்களா என்பதை அவதானித்து, அவற்றைச் செய்வதற்கு உற்சாகம் கொடுத்தல் மிக இன்றியமையாதது. (இன்றி)
5. வீட்டில் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைசெய்யும் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும்.

**தினசரி குடும்பப் பிரார்த்தனை**

குடும்பம் ஒரு கோவில். அது தெய்வீகமான உறவு என்பதை நாம் உணர்ந்தோமானால் இறைவன் திருவருள் எம்மை நோக்கித் தென்றலாக வீசும்.

தினசரி பிரார்த்தனை செய்வதால் வீட்டுக்கு நன்மை ஏற்படும், தெய்வீக அருள் கிடைக்கும், குடும்பத்தில் செல்வமும் ஒற்றுமையும் அன்பும் வளரும், அமைதியும் ஆனந்தமும் அதிகரிக்கும், எனவே எல்லோரும் மாலை நேரத்தில் ஒன்றுசேர்ந்து பிரார்த்தனை செய்யும் பழக்கத்தைக் கைக்கொண்டு தெய்வீக அருளையும் பெரும் நன்மையையும் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடைய நாமமந்திரங்கள், தேவாரங்கள், வேதமந்திரங்கள், பஜனைப் பாடல்களை குடும்பத்தினர் சேர்ந்து ஓதும் அதிர்வலையால் நிரப்பப்பட்டு தீய அலைகள் துரத்தப்படுகிறது. இந்த இரகசியத்தின் சிறப்பை அறிந்தவர்கள் உயர்வடைகிறார்கள்.

மாமிசம் சமைத்துவிட்டோமே, சாப்பிட்டுவிட்டோமே என்று பிரார்த்தனையை ஒத்திப்போடவேண்டியதில்லை. பிரார்த்தனையைச் செய்துவாருங்கள், நாளடைவில் மாமிசத்தின்மீது வெறுப்பு ஏற்பட்டு சைவ உணவை விரும்புவீர்கள். இறைவன் விரும்புவது உங்களுடைய தூய்மையான அன்பைத்தான்.

தினமும் பிரார்த்தனையை மாலை 5.30 மணிக்குப் பின் 7.30 மணிக்குள் இரவு சாப்பாட்டுக்கு முன்னதாக செய்வது நன்று. தினமும் ஒழுங்கான நேரத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. ஆரம்பத்தில் 15 நிமிடங்களில் இருந்து உங்கள் வசதிக்கேற்ப நேரத்தை அதிகப் படுத்தலாம். இரவுச் சாப்பாடு 8.00 மணிக்குப் பிந்தாமல் எடுக்க வேண்டும். சாப்பிட்டபின் ஆகக்குறைந்தது 2 மணித்தியாலங்களாவது சென்றபின்தான் நித்திரைக்குச் செல்லவேண்டும்.

**பிரார்த்தனை செய்யும் முறை**

1. உடல் சுத்தம் மிக அவசியமானது, தினமும் குளிக்கும் பழக்கம் நன்று, பிரார்த்தனைக்கு முன் கைகால் முகம் கழுவுதல் நன்று.
2. வீட்டில் லிவிங் ரூம் என்று சொல்லப்படும் பொதுக் கூடத்தில் (ஹோல்) தரையில் உட்கார்ந்து, தரையில் உட்கார முடியாத வயோதிபர்கள் கதிரையில் உட்காரலாம்.
3. எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடவேண்டும், முதலில் "ஓம்" எனும் பிரணவ மந்திரத்தை மூன்று தடவைகள் ஓதுதல்.
4. பின் காயத்திரி மந்திரத்தை மூன்று தடவை ஓதுதல்.
5. பிள்ளையாருக்கு தேவாரம் அல்லது பாடல் பாடுதல்.
6. திரியம்பக மந்திரம் மூன்று தடவை ஓதுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தொடர்ந்து குரு சிவனுக்கு, சக்திக்கு, விஷ்ணுவுக்கு, ராமர், கிருஷ்ணர், முருகன், ஐயப்பன் மேலும் அவரவர் விரும்பிய இஷ்ட தெய்வங்களுக்கு தேவாரம் நாமமந்திரம், பாடல்கள் பாடலாம். அதன்பின் திருப்புகழ்பாடி வேதமந்திரங்கள் ஓதி, நாடி சுத்தி செய்தபின்பு தியானம் செய்தல். இந்த முறையில்தான் எமது மன்ற வகுப்புகளில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் பிள்ளைகள் மூலம் பெற்றோர் அறிந்து கொள்ளலாம்.

**பிள்ளைகளின் அன்றாடப் பழக்க நெறிகள்**

1. காலை படுக்கையைவிட்டு எழும்போது தமது இரு உள்ளங்கை களாலும் முகத்தைத் தடவி உள்ளம் கைவிரல் பாகத்தில் லக்ஷ்மியையும், நடுப்பாகத்தில் சரஸ்வதியையும், அடிப்பாகத்தில் நாராயணனும் இருப்பதாக நினைத்து உள்ளம் கைகளைப் பார்க்க வேண்டும்.
2. தமது படுக்கையை தாமே ஒழுங்குபடுத்துதல்.
3. பல் துலக்கி உடல் சுத்தம் செய்தல்.
4. கடவுள் வணக்கம் செய்தல்.
5. பாடசாலை செல்லும்போது பெற்றாரை வணங்கிச் செல்லல் வேண்டும். இப்பழக்கத்தைச் சிறுவயதிலேயே பழக்கிக்கொண்டு வருதல் மிகநன்று.
6. மாலையில் விளையாட வேண்டும். விளையாடுவதால் ஆரோக்கியம் அதிகரிக்கும், ரீ.வீ பார்க்கும் நேரமும் குறைக்கப்படுகிறது.
7. விளையாட்டு முடிந்ததும் குளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். பின்பு குடும்பப் பிரார்த்தனை செய்தல் வேண்டும். 5.30 மணியிலிருந்து 7.30 மணிக்குள் பிரார்த்தனை செய்வது நலம். தினமும் குறிப்பிட்ட நேரத்தில் குடும்பப் பிரார்த்தனையை ஆரம்பித்துப் பழக்கத்தில் கொண்டு வருதல் மிகவும் விஷேட மாகும். பிரார்த்தனைக்குப் பின்பே இரவு உணவு எடுத்தல் முக்கியமானது.
8. பிரார்த்தனை முடிந்ததும் ஏழைகளுக்குத் தானம் கொடுப்பதற்காக சில்லறைக் காசு பிள்ளைகளின் கையால் போட்டுவரல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் செய்யும் பழக்கம் மிகவும் முக்கியமானது தானம் செய்பவர்களே எதிர்காலத்தில் நிறைந்த செல்வத்தைப் பெற்று வாழ்வார்கள்.

9. வீட்டுக்கு வரும் விருந்தினர்களை கைகூப்பி வணக்கம் கூறி வரவேற்கும் பழக்கத்தைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தவேண்டும். இறைவன் எல்லோருக்குள்ளும் இருக்கிறார் எனவே நாம் பிறர் மீது அன்பு செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துகிறோம், அத்தோடு பிள்ளைகள் மீது விருந்தினர்கள் அன்பும் பெருமதிப்பும் கொள்வார்கள்.

10. இரவு 9.30 மணியிலிருந்து 10.00 மணிக்குள்ளாக பிள்ளைகள் நித்திரைக்குப் போகும் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். நித்திரைக் குப் போகுமுன் காலைக்கழுவிச் சுத்தம் செய்துவிட்டு அம்மா அப்பாவின் பாதங்களைத்தொட்டு வணங்கிவிட்டு நித்திரைக்குச் செல்லவேண்டும்.

11. பெற்றார், பிள்ளைகள், குடும்ப உற்றார், உறவினர்கள் சைவ சமய தீட்சையை பெறவேண்டும் என்பதனை இறுக்கமாக கடைப்பிடிக்கவும்.

மேற்கூறிய பழக்கங்களைப் பிள்ளைகள் கடைப்பிடிப்பதால் அவர்களுக்கு நல்ல பழக்கங்களுடன் நல்ல அறிவும் தெய்வீக ஆற்றலும் ஏற்படுகிறது. அவர்கள் சான்றோர்களாக ஆவதற்கு இவையே மிக முக்கியமான அத்திவாரம்.

நல்ல பெற்றோர்கள் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்கு உருவாக்கப் பாடுபடுவார்கள். இவர்களின் இந்த நல்லமுயற்சி ஒருநாளும் வீண்போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன்கோவில் வழிபாடு

சிவன் கோவிலுக்கு நாம் அடிக்கடி செல்கிறோம். சிலர் சிவமூர்த்தியையும், கோயிலை சுற்றி சின்ன சின்ன ஆலயங்களில் அமைந்துள்ள தெய்வங்களையும் வணங்குவது வழக்கம். சிலர் சிவமூர்த்தியை மட்டும் வணங்கிவிட்டு திரும்பிவிடுவர். அப்படி அல்லாமல் ஏனைய அனைத்து தெய்வங்களையும் வழிபட வழிபாடுகள் இருப்பதால் சிறிய கோவிலானாலும் தெய்வசக்தி உச்சத்தில் இருக்கும், சிவபெருமான் கோயில்களில் கிரஹத்தின் தெற்குப்புறமாய் வீற்றிருக்கும் தட்சணாமூர்த்தியை சிவனுக்கும் அம்மனுக்கும் அடுத்தபடியாக வழிபடவேண்டும்.

ஓம் தற்புருஷாய பித்மஹே, வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி பிரசோதயாத்

## தட்சிணா மூர்த்தி காயத்ரி மந்திரம்

ஓம் தட்சிணாமூர்த்தியே வித்மஹே
த்யாநஸ்தாய தீமஹி
தந்நோநீச ப்ரசோதயாத்.

அதன்பின் வெளியே உள்ள தெய்வங்களை வணங்குதல் வேண்டும். அத் தெய்வங்களுக்குரிய மந்திரங்கள்.

## நந்தீஸ்வரர்

ஓம் தத்புருஷாய வித்மஹே
சக்ரதுண்டாய தீமஹி
தந்தோ தந்தி ப்ரசோதயாத்

## பிரம்மா

ஓம் வேதாத் மனாஹாய வித்மஹே
ஹிரண்ய கர்ப்பாய தீமஹி
தந்நோ ப்ரம்ம ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சுப்பிரமணியர் காயத்ரீ

ஓம் ததபுருஷாய வித்மஹே!
மஹா ஜேனாய தீமஹீ
தந்தோ ஷண்முக ப்ரசோதபாத்!

## ஸ்ரீ அம்பாள் காயத்ரீ

ஓம் காத்யாயநாய வித்மஹே!
கந்யகுமாரி தீமஹீ!
தந்தோ துர்கி: ப்ரசோதயாத்!

## ஸ்ரீ சரஸ்வதி காயத்ரீ

ஓம் வாக் தேவ்யை ச வித்மஹே!
விரிஞ்சி பத்ந்யை ச தீமஹீ!
தந்தோ வாணீ: ப்ரசோதயாத்!

## ஸ்ரீ லக்மி காயத்ரி

ஓம் மஹாதேவ்யை வித்மஹே!
விஷ்ணு பத்ந்யை ச தீமஹீ!
தந்நோ லக்மி: ப்ரசோதயாத்!

## ஸ்ரீ சிவன் காயத்ரீ

ஓம் தத்புருஷாய வித்மஹே!
மஹாதேவாய தீமஹீ!
தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்!

## ஸ்ரீ ப்ரம்மா காயத்ரீ

ஓம் வேதாத்மகாய வித்மஹே!
ஹிரண்ய கர்பாய தீமஹீ
தந்தோ ப்ரம்மா: ப்ரசோதயாத்!

## ஸ்ரீ பெருமாள் காயத்ரீ

ஓம் நிரஞ்ஜநாய வித்மஹே!
நிராபாஸாய தீமஹீ!
தந்நோ ஸ்ரீ நிவாச: ப்ரசோதயாத்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் யாருக்கு என்னென்ன மலர்கள் சாத்தி வழிபடலாம் எனும் விளக்கம்

1) விநாயகருக்கு: செம்பருத்தி, தாமரை, ரோஜா மற்றும் அறுகம்புல் முதலியன.
2) சிவனுக்கு: வில்வம், சங்கு, மலர், தும்பை, தாமரை மலர், செம்பருத்தி
3) விஷ்ணுவுக்கு: பவளமல்லி, தாமரை, மருக்கொழுந்து, துளசி
4) அம்பிகைக்கு: வெண்தாமரை, மல்லிகை, சூரியகாந்தி, முல்லை, செவ்வரளி. செம்பவளமல்லி
5) முருகனுக்கு: முல்லை, மல்லிகை, சாமந்தி, சூரியகாந்தி, ரோஜா

## பூஜைக்குப் பயன்படுத்தப்படும் பூக்கள் தரும் பலன்கள்

1) மனோரஞ்சிதம் - தம்பதிகளுக்குள் ஒற்றுமையைத்தரும்.
2) நீலச்சங்கு புஷ்பம், நீலக் கனகாம்பரம்- நீண்ட ஆயுள், சனிபகவான் அருளும் கிடைக்கும்.
3) மஞ்சள் அரளி, பொன் அரளி, செவ்வந்தி - கடன்கள் அடைபடும், திருமணம் கைகூடும், வியாழ தோஷம் நீங்கும்.
4) சிவப்பு அரளிப்பூ - குடும்ப ஒற்றுமை தரும், கவலையைத் தீர்க்கும்
5) வெண்தாமரை, வெள்ளை நந்தியாவட்டை, மல்லிகை, ஜாதிமல்லி, பிச்சிப்பூ, மர வல்லி - மனச் சஞ்சலத்தைப் போக்கும்.
6) செந்தாமரை - ஆத்மபலம், நீண்டஆயுள், செல்வம், வியாபார விருத்தி, சூரிய பகவான் அருள் என்பன கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலன்கள் தரவல்ல அர்ச்சனை இலைகள்

| | |
|---|---|
| 1) சௌபாக்கிய வாழ்வுக்கு | - வெள்ளறுகம்புல் |
| 2) வாக்குவன்மை | - அரச இலை |
| 3) கல்வியில் மேன்மைக்கு | - இலந்தை இலை |
| 4) தீய சக்திகள் அகல | - மரு (இலை) |
| 5) தர்மசிந்தனை வளர | - முல்லை இலை |
| 6) துயரங்கள் நீங்க | - அகத்திக்கீரை |
| 7) பொருள் பெற | - கரிசலாங்கண்ணி இலை |
| 8) பில்லி சூனியம் நீங்க | - தாழை இலை |
| 9) இன்பம் பெற | - வில்வ இலை |
| 10) ஞானத்தன்மைக்கு | - ஜாதி மல்லிகை இலை |

## கடவுள்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருள்கள்

| | |
|---|---|
| விநாயகருக்கு | - கொழுக்கட்டை, சர்க்கரைப் பொங்கல், கொண்டைக் கடலை |
| சிவபெருமானுக்கு | - வெண்பொங்கல், வடை, திங்கட்கிழமைகளில் தோசை |
| பார்வதிக்கு | - சர்க்கரைப்பொங்கல், உழுத்தம் வடை |
| முருகனுக்கு | - சர்க்கரைப்பொங்கல், புளியோதரை |
| துர்க்கைக்கு | - பாயசம், சர்க்கரைப்பொங்கல் |
| ஆஞ்சநேயர் | - மிளகுவடை, தயிர்சாதம் |
| நந்திகேஸ்வரர் | - காப்பரிசி |

## நவக்கிரகங்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருட்கள்

| | |
|---|---|
| சூரியனுக்கு | - சூடு ஆறாத சர்க்கரைப்பொங்கல் |
| சந்திரனுக்கு | - பால் பாயசம் |
| செவ்வாய்க்கு | - பொங்கல் |
| புதனுக்கு | - புளியோதரை |
| குருவுக்கு | - தயிர்சாதம் |
| சுக்கிரனுக்கு | - நெய்ப்பொங்கல் |
| இராகுவுக்கு | - உழுந்து சாதம் |
| கேதுவுக்கு | - கொள்ளுப்பொடி கலந்த அன்னம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தச தானங்கள்

1) கோதானம்
2) பூமி தானம்
3) எள்ளு தானம்
4) சுவர்ண தானம் (பவுண்)
5) நெய் தானம்
6) வஸ்திரதானம்
7) தானிய தானம்
8) வெல்ல தானம்
9) வெள்ளி தானம்
10) உப்பு தானம்

## எந்தெந்தக் கடவுள் என்னென்ன பிரியப்படுவார்கள் எனும் விளக்கம்

அபிஷேகப்பிரியர் - சிவன்
அலங்காரப் பிரியர் - மகாவிஷ்ணு
நமஸ்காரப்பிரியர் - சூரியபகவான்
நைவேத்தியப் பிரியர் - விநாயகர்

## குத்து விளக்கும் அதன் பலன்களும்

விரத நாட்களிலும், மற்ற நாட்களிலும் நாம் தீபம் ஏற்றுவதற்கு குத்துவிளக்கைப் பயன்படுத்துகிறோம். அதில், எத்தனை முகம் ஏற்றுகிறோமோ அதைப்பொறுத்து அத்தனை விதமான பலன்கள் கிடைக்கின்றன.

ஒரு முகம் ஏற்றினால் - மத்திம பலன் தரும்.
இரண்டு முகம் ஏற்றினால் - குடும்ப ஒற்றுமை
மூன்று முகம் ஏற்றினால் - புத்திர சுகம் தரும்
நான்கு முகம் ஏற்றினால் - பசு, பூமி ஆகியவற்றைத் தரும்
ஐந்து முகம் ஏற்றினால் - செல்வத்தைத் தரும்.

## தூப தீபங்களின் அதி தேவதைகள்

தூபத்தில் - அக்னி தேவன்
மகா தீபத்தில் - சிவன்
நாக தீபத்தில் - கேது
விருஷ தீபத்தில் - தர்மதேவதை
புருஷாம்ருக தீபத்தில் - விஷ்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பூரண கும்பத்தில் | - உருத்திரன் |
| பஞ்ச தட்டுகளில் | - பிரம்ம தேவதைகள்: (ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்) |
| நட்சத்திர தீபங்களில் | - 27 நட்சத்திரங்கள் |
| மேரு தீபத்தில் | - 12 சூரியர்கள் |
| திருநீறு - விபூதியில் | - பரமேஸ்வரன் |
| கண்ணாடியில் | - சூரியன் |
| குடையில் | - சந்திரன் |
| சாமரத்தில் | - மகாலட்சுமி |
| விசிறியில் | - வாயு |
| கொடியில் | - நந்திதேவர் |
| ஆலவட்டத்தில் | - பிரம்மா |
| கற்பூரத்தில் | - அக்கினி |

## ஆலயங்களில் இசைக்கப்படும் வாத்திய இசைகளும் அவற்றால் ஏற்படும் பலன்களும்

| | |
|---|---|
| மத்தளம் | - சுகங்களும் |
| பேரிகை | - புஷ்டவிருத்தி |
| தாளம் | - கிலேச நாசம் |
| கைத்தாளம் | - அபயம் |
| சல்லரி | - காமிகபலன் |
| நரம்புவாத்தியம் | - காமிசுபலன் |
| துளை வாத்தியம் | - புத்திர பௌத்திர விருத்தி |
| சங்கு | - சத்துரு நாசம் |
| தோல் வாத்தியம் | - பிணி தீர்த்தல் |

## அபிஷேகப் பொருட்களும் அவற்றினால் கிடைக்கும் பலன்களும்

| | |
|---|---|
| தூயநீர் | - சாந்தி |
| மலரிட்ட தூயநீர் | - மலநீக்கம் |
| வாசனைத்திரவியம் | - நீடித்த ஆயுள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சந்தனம் | - செல்வம், சாயுச்சிய முத்தி |
| பால் | - ஆயுள் விருத்தி |
| தயிர் | - புத்திர பாக்கியம் |
| நெய் | - மோட்சம் |
| தேன் | - இசைஞான விருத்தி |
| கருப்பஞ்சாறு | - நித்திய சுகம் |
| சர்க்கரை | - சத்துருநாசம் |
| வாழைப்பழம் | - பயிர்விருத்தி |
| மாம்பழம் | - உலக வசீகரம் |
| மாதுளம்பழம் | - பகைநீக்கம் |
| நாரத்தம்பழம் | - சற்புத்தி |
| தேங்காய்ப்பூ | - அரசுரிமை |
| இளநீர் | - நன்மக்கட்பேறு |
| கோரோசனை | - தீர்க்காயுள் |
| பச்சைக்கற்பூரம் | - பயம் நீங்கும் |
| கஸ்தூரி | - வெற்றி உண்டாகும் |
| பன்னீர் | - சாலோக முத்தி |
| அன்னம் | - ஆரோக்கியம் |
| மாக்காப்பு | - மலநாசம் |
| மஞ்சட்காப்பு | - இராசவசியம் |
| பஞ்ச கவ்யம் | - ஆன்மசுத்தி |
| பஞ்சாமிர்தம் | - செல்வம் |

## சில தத்துவங்கள்

(கும்பம் + தேங்காய் + கற்பூரம் + தூபதீபம்)

**அ. கும்பம்**

குடம் - தசை
அதனுள் உள்ள நீர் - குருதி
அதனுள் உள்ள இரத்தினங்கள் - எலும்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்தைச் சுற்றியுள்ள நூல் - நாடிகள்
செபிக்கப்படும் மந்திரம் - உயிர்
கூர்ச்சம் - தலைமயிர்
மாவிலை - சடை
தேங்காய் - தலை
வஸ்திரம் - தோல்

**ஆ. தேங்காய்**

புற ஓடு - உலகமாயை
உள்ளீடு - பரம்பொருள்
இளநீர் - திருவருள்

எனவே தேங்காய் உடைக்கும் செயல் மாயையை அகற்றி பரஞான ஒளியைக் காட்டி அதனருளால் பரமானந்த அமிர்தத்தை நுகரச்செய்தலைக் குறிக்கின்றது.

**இ. கற்பூரம்**

வெண்மையான கற்பூரமானது அக்கினி பற்றியதும் தன் வடிவை நீத்து அக்கினியுடன் கலந்து வானில் அத்துவிதமாய் விளங்குகின்றது. அதுபோல ஆன்மாக்களும் ஞானக்கினிப் பற்றிய இடத்தே மாயத் தன்மை நீங்கி தூல, சூட்சும, காரண உடல்கள் அழியப்பெற்று பரம்பொருளுடன் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடையும் என்பதை உணர்த்துகின்றது.

கற்பூர ஆரத்தியைத் தொட்டு இரு கண்களிலும் ஒற்றிக் கொள்ளுதல் நேத்திர சுகத்தையும் ஞானக்கண்ணையும் தரும் என்பதை உணர்த்தும்.

**ஈ. தூபதீபம்**

தூபம் கிரியா சக்தியின் சொரூபம். தூபம் ஆணவ மல நீக்கத்தையும் தீபம் பாப நீக்கத்தையும் உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்த கருமங்கள் நிறைவு பெறவும் தொழில் வருமானம் விவசாயம் வருவாய் பெருகவும் படிக்க வேண்டிய பதிகம்

## முதலாம் திருமுறை

திருவீழிமிழலை பண்:- குறிஞ்சி

திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தரும் திருவீழி மிழலையில் தங்கி அங்கு நிலவிய பஞ்சத்தைப் போக்கத் திருவுளம் பற்றினார்கள். இருவரும் மிழலைப்பெருமானிடம் படிக்காசு பெற்று அன்னதானம் செய்துவந்தார்கள். சம்பந்தர் பெற்ற காசு வாசியுடைய தாக (குற்றம் உடையதாக) இருப்பதையறிந்து அக்குற்றம் நீங்க பாடியருளிய பதிகம் இப்பதிகம். இதை அன்புடன் ஓதி உயர்நீதிமன்ற வழக்குகளில் வெற்றிபெற்றவர்கள் பலர். விவசாயத்தில் வளம் பெறவும், வியாபாரத்தில் லாபம் குறையாம லிருக்கவும் இப்பதிகம் பெரிதும் துணைபுரியும் என்பதில் சிறிதும் ஐயம் வேண்டாம்.

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே

நீறுபூசினீர் ஏறதேறினீர்
கூறுமிழலையீர் பேறும் அருளுமே

காமன்வேவஓர் தூமக்கண்ணினீர்
நாம மிழலையீர் சேம நல்குமே

பிணிகொள் சடையினீர் மணிகொள்மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே

அயனு மாலுமாய் முயலு முடியினீர்
இயலு மிழலையீர் பயனும் அருளுமே

பறிகொள் தலையினார் அறிவதறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறவதரியதே

காழிமாநகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே.
(பதிகம் முற்றிற்று)

## பிரசவம் இனிதே நடைபெற உதவும் பதிகம்

காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள சிவத்தலம் திருச்சிராப்பள்ளி ஆகும். இத்தலத்து சுவாமிக்குத் "தாயுமானரர்" என்று பெயர். கோயில் மலைமேல் உள்ளது. இது 'தட்சண கைலாயம்' எனப்படும். சுவாமியிடம் மிகுந்த அன்புடைய மாது ஒருவர் காவிரியின் வடகரையில் வாழ்ந்து வந்தாள். இவளுடைய பிரசவ காலத்தில் காவிரி பெருகியதால், தாய், தந்தையர் உதவ முடியவில்லை. அச் சமயத்தில் சுவாமியை வேண்ட, அவர் அவளுடைய தாயின் வடிவில் வந்து மருத்துவம் செய்து, பிரசவம் இனிதே நடைபெற அருளினார். இத் தலத்து இறைவனை வழிபட்டு சம்பந்தரால் பாடப்பெற்ற இப் பதிகத்தை ஓதினால் பிரசவத்தில் எந்த சங்கடமும் ஏற்படாது இனிதே முடியும் என்பது பல பெரியவர் கள் அனுபவித்த உண்மையாகும்.

திருச்சிராப்பள்ளி பண்:- குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிருமே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைம்மகவேந்தி கடுவனொடு ஊடிக்கழைபாய் வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத்து ஈருரி போர்த்த விகிர்தாநீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே. 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரைநீழல்
செந்தண் புனமுஞ் சுனையுஞ் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறை மல்கு சார்ற் சுனை மல்கு நீலத்திடை வைகிச்
சிறை மல்கு வண்டுந்தம்பியும் பாடுஞ் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன் கனலெரியாடுங் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி யுடையவன் எங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல்லாமையுரைப் பீர்காள்
நிலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாகுமே. 5

வெய்யதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன் சேருஞ் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையலோர் பாகம்மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வர் ஆரிவர் செய்கை அறிவாரே. 6

வேயுயர் சாரல் கருவிலூகம் விளையாடும்
சேயுயர் கோயிற் சிராப்பள்ளி மேய பெருமானார்
பேயுயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. 7

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலுஞ் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புள்ளி நாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர் உம்மை யேதிலர் கண்டால் இகழாரே. 9

நாணாது உடை நீத்தோர்களுங் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவார்கள் உரைக்குஞ்சொல்
பேணாது உறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே. 10

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரோடு மன்னி வாழ்வாரே. 11

## தரித்திரம் நீங்கி பொருள் பெறுவதற்குப் பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் திருவாவடுதுறை வருகிறார். இவரது தந்தையார் யாகம் செய்யப் பொருள் வேண்டினார். உடனே, சம்பந்தரும் ஆவடுதுறை உறையும் எந்தையின் அடித்தலங்களே அந்தமில்பொருள் என்றெண்ணி இத்திருப்பதிகத்தைப் பாடினார். பெருமானும் ஆயிரம் பொற்காசுகள் கொண்ட உலவாக்கிழியை பலிபீடத்திலே வைத்தருளினார்.

பொருள் வேண்டி பலவித ஹோமங்கள், செய் (மற்றும் எதை எதையோ நாடி ஏமாற்றம் அடையாமல்) வதைப்போல இப்பதிகத்தைப் பேரவா இன்றி அன்புள்ளத்துடனும், நம்பிக்கை யுடனும் பாராயணம் செய்து வந்தால் இல்லறம் வறுமையின்றி வளமுடன் நடைபெறும்.

திருவாவடுதுறை பண்:- காந்தார பஞ்சமம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது தொழுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

வாழினும் சாவினும் வருந்தினும்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளும் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அல்லேன்
புனல்விரி நறுங் கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்த வெண் பொடியணி சங்கரனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல் எழ விழித்தவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

பேரிடர் பெருகி ஓர் பிணிவரின்
சீருடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடை யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையே
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின் நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே.

(பதிகம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக்கவலைகள் ஒழியவும் பிறவாநிலை எய்தவும் பாராயணம்செய்ய வேண்டிய பதிகம்

பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு சம்பந்தப்பெருமான் சீர்காழி வருகின்றார். அச்சமயத்தில் பெரியோர்கள் விருப்பப்படியே, நல்லூர்ப் பெருமணம் என்னுமிடத்தில் திருமணம் நடைபெறுகிறது. திருமணம் முடிந்ததும் சம்பந்தப்பெருமான் நல்லூர்ப்பெருமண ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வேண்ட, கர்ப்பக்கிரகத்தில் அரும்பெரும் ஜோதி தோன்றியது. அச்சமயத்தில் இப்பஞ்சாக்கிரகப் பதிகத்தைப் பாடிய வண்ணம் அனைவருடனும் சோதியில் கலந்தார்.

இப்பதிகத்தைப் பாராயணம் செய்வதால் மனக்கவலை மாறும். பதி புண்ணியம் பெருகும். உயிர்க்கு உறுதி ஏற்பட்டு பிறவாநிலை எய்தலாம்.

நமச்சிவாயப்பதிகம் பண்:- கௌசிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண் மலர்வார் மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே.

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவர்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே.

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வார் ஏனும் குணம் பல நன்மைகள்
இல்லார் ஏனும் இயம்புவர் ஆயிடின
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே.

மந்தரம் அன்ன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குவால்
நந்தி நாமம் நமச்சிவாயவே.

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய்வானர் ஆயின் உருத்திரர்
விரவியே புகவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே.

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே.

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால் விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே.

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண் பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே.

கஞ்சி மண்டையர் கையில் உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பவரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுன் கண்டன் நமச்சிவாயவே.

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ..த்த வல்லார் எலாம்
பந்தபாசம் அறுக்க வ....ார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பும் இறப்பும் அற்றுப்போகவும் (மோட்சமடைய) தமிழ்வேதம் முழுவதும் ஓதிய பலனும் நல்கும் ஒப்பற்ற பதிகம்

திருஞான சம்பந்தப்பெருமானுடைய தந்தையார் சிவபாத விருதயர் தமது பூசைக்காலத்துத் தினமும் பிள்ளையாரது திருப்பதி கங்களை ஓதும் முறைமை உடையவராய் இருந்தார். நாளும் பதிகங்கள் பெருகிக்கொண்டே வந்ததால், சிவபாதவிருதயர் முற்றும் ஓதவியலாது வருத்தமடைந்தார். இதையறிந்த திருஞானசம்பந்தப் பெருமான் இத்"திருவெழுகூற்றிருக்கை" எனும் பதிகத்தை தம் தந்தையாருக்கு அருளி, இதனை ஓதின் எல்லாப்பதிகங்களையும் ஓதிய பலன்கிடைக்கும் என்றும் கூறியருளினார்.

எனவே இப்பதிகத்தை ஓதினால் தமிழ் வேதத்தையே ஒரு முறை ஓதியபலன் (தேவாரம் முழுவதும் ஓதிய பயன்) நிச்சயம் கிடைக்கும் அளவிலா புண்ணியம் பெறலாம். இப்பதிகம் ஓதும் வீடும் தூய்மை அடையும்.

## திருஞானசம்பந்தர் அருளிய திருஎழுகூற்றிருக்கை

முதலாம் திருமுறை

திருப்பிரமபுரம் பண்: வியாழக்குறிஞ்சி

ஓர் உரு ஆயினை மானாங்காரத்து
ஈரியல் பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல்நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுதேத்திய் நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருந்தி அரவமோடு ஒரு மதி சூடினை
ஒருதாள் ஈர்அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று ...லத்துற அவுணரை அறுத்தனை
ஐம் புலன் நாலாம் அந்தக்கரணம்
முக்கு...ணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்... நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி
வரன்முறை பயின்றெழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை
இகலி...மைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த
தோணி புறத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தாராய் ஏய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறலரக்கன்
விறல் கெடுத்தருளினை புறவம்புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுப்பதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே

(முற்றிற்று)

சிவா திருச்சிற்றம்பலம்

எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ்க வளமுடன்

சுபம்! சுபம்! சுபம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...யும் பணிவுடன் தெரிவிக்கின்றோம்

...ம் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இ... ...ரில வாழ்க்கையில் மனித விழுமியங்கள் வளரவேண்டும் ... ...ாக்குடன் குழந்தைகள் வளரும்போது சமய கலாசார வாழ்... ...யுடன் வளரவேண்டும் என்பதனை உணர்ந்து இச்சிறியநூல் வெளி வருகின்றது. இதற்குரிய பொருளுதவி புரிந்த V.M.K. நிறுவன உரிமையாளர் உயர்திரு. K. புலேந்திரன் அவர்கட்கும் அவரது குடும்பத்தினர்க்கும் எல்லாம்வல்ல விக்கினம் தீர்க்கும் வீரகத்தி விநாயகன் திருவருள்புரிய வேண்டுமென்று வேண்டுகின்றேன். அத்துடன் இதுபோன்ற ஆன்மீக எழுச்சியான விடயங்கள் இவரது தாய், தந்தை பெயரால் மக்களிடம் சென்றடைய வழியமைத்த வாரிவனம் அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆசியையும் அவர்களுக்கு கிடைக்க வேண்டுகிறேன். அத்துடன் எமது கோரிக்கையை ஏற்று இன்று புத்தகமாக வெளிவரும் நூலானது பாடசாலை மாணவர்களின் கைநூலாக அமையவுள்ளது. வருட இறுதியில் பாடசாலைகளில் சமய அறிவுப் போட்டிகள் நடைபெறும்போது பயன்படவுள்ளது. இந்நூல் என்பதனையும் அறிவித்து எமது மன்றத்தின் மனமார்ந்த நன்றியை முதலாவதாக V.M.K. நிறுவனத்தினர்க்கு அறியத்தருகின்றோம். அடுத்து ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்தி தந்துதவிய சிவாலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ தி. உமாசுதக்குருக்கள் அவர்களுக்கும், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களுக்கும், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய அதிபர் இ. ரவீந்திரன் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இறைஆசியை வேண்டுவதோடு நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

எமது மன்றம் வலயக்கல்விப்பணிமனை ஊடாக சில கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இது ஆரம்பச்செயல் என்பதனைக்கூறி அமைகின்றேன்.

நன்றி

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

**கு. சுமுகலிங்கம்**
செயலாளர்

**M.C. குலசிங்கம்**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.M.K. Jewellery

## 22 Ct. Gold House



வீ. மாற்றுக் குறையாத தங்க வைர நகைகளுக்கும்,

நவரத்தினக் கற்களுக்கும் தனக்கென

எம். ஓர் இடம் பிடித்து நிற்கும்

ஓரே நிறுவனம்.

கே.





## ஜுவல்லர்ஸ்

105, Power House Road,
Jaffna.
T.P : 021-222 7339
021-4590975

15, Kandy Road,
Chavakachcheri.
T.P : 071-2324412
0777723021


திருக்கணித பதிப்பகம், 114, டச்சு வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org